DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 130/2021 Crime No. 54/2017 Station Rayakottai PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw 13/Pw 12/ Kamalesan/ | Village | |
| Father Name | Perumal | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**06.08.2025.**

**1 மற்றும் 2 வது எதிரிகள் ஆஜர், 1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

நான் தற்போது நீலகிரி மாவட்டம், மாவட்ட குற்றபிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.01.2021 ம் தேதி ராயக்கோட்டை வட்ட காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராயக்கோட்டை காவல் நியைல குறற எண்.54/2017 சட்டபிரிவு 341, 427, 307, 34 இ.த.ச. alter 341, 477, 307 இ.த.ச வழக்கை காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் மகாதேவன் என்பவர் வழக்கு பதிவு செய்து முதல் விசாணை முடித்து வைத்திருந்ததை எனக்கு முன் காவல் ஆய்வாளாரக இருந்த திரு. சண்முகசுந்தரம் அவர்கள் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரணை செய்துள்ளார். தற்போது திரு.சண்முகசுந்தரம் திருப்புவனம் சப்டிவிசன் DSP ஆக இருந்து தற்போது பணி நீக்கத்தில் இருப்பதால் அவர் பங்கினையும் சேர்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிகள் 1.டாக்டர்.சங்கீதப்பிரியா, திரு. சி.முருகன் தலைமைகாவலர் 871, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் மாகாதேவன் ஆகியேர்களை விசாரித்து பிறகு சாட்சி 1.சூர்யா என்பவருக்கு மறு வாகக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிறகு நான் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு, சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்ததில் ஏற்கனவே முதல் விசாரணை செய்த அதிகாரிகளிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் மகாதேவன் என்பவர் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.10** ஆகும். பிறகு குற்ற தொடர்பு துறை துணை இயக்குநர் அவரிகளிடம் மாதிரி இறுதி அறிக்கைபெற்று சட்டமாறுதல் அறிக்கை தாக்கல் செய்துளேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆகும். அதற்குண்டான படிவம் 95 **அ.த.சா.ஆ.12** ஆகும். என்னுடைய விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. சட்டபிரிவுகள் 341, 427, 307, 34, படி இறுதி அறிக்கை ஐ தேன்கனிக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்**

இந்த வழக்கின் குற்ற எண்.54/2017 ஆகும். அ.சா.1 மற்றும் இருவர் சேர்ந்து எதிரிகளை அவர்கள் தாக்கியதாக குற்ற எண்.55/2017 எங்கள் காவல் நிலையத்தில் பதிவாகி இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் காலை 9.00 மணி ஆகும். எதிரிகள் வந்ததாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ, சாட்சிகளின் கு.விமு.ச பிரிவு161

மற்றும் குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றும் மேலும் அந்த இரண்டு சக்கரவாகனம் கைப்பற்றப்பட்டு நீதிமன்றதில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சாட்சி வழக்கு கோப்பை பார்வையிட்டு சரி என்று கூறுகிறார். எதிரிகள் உடைத்தாக சொல்லப்படும் மைக்ரோமேக்ஸ் நிறுவனத்தின் செல்போன் புகார் தாரருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கும் அது உடைக்கப்பட்டுள்ளதை காட்டுவதற்கும், அந்த மைக்ரோமேக்ஸ் செல்போனையோ, அதன் உதிரிபாகங்களையோ இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சாட்சி வழக்கு கோப்பை பார்வையிட்டு இல்லை என்று கூறுகிறார். புகார்தாரர் புகாரில் மைக்ரோமேக்ஸ் செல்போனுக்குள் அவரது சிம்கார்டு இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த சிம் கார்டு கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சாட்சி வழக்கு கோப்பை பார்வையிட்டு சரி என்று கூறுகிறார். புகார்தாரர் காயம் பட்ட உடன் ராயக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி சிகிச்சைக்காக சேர்ந்துள்ளாதாக சொல்லியுள்ளநிலையில் அந்த மருத்துவரை விசாரித்து இந்த வழக்கில் ஒரு சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக அருவாளாள் கால் பகுதியில் வெட்டப்படும் போது பேண்ட் முதலில் வெட்டுப்பட்டு அதன் பிறகு சதைகள் கிழிக்கப்பட்டு தான் இரத்தம் வந்திருக்கும் என்றால் அதை மருத்துவரிடம் தான் கேட்கவேண்டும். இந்த வழக்கில் காயம் பட்டவரின் இரத்தகரை படிந்த துணிகள் ஏதாவது கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் சாட்சி வழக்கு கோப்பை பார்வையிட்டு இல்லை என்று கூறுகிறார். இந்த வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து இரத்தகரை படிந்த மண்ணோ, கல்லோ, பெருளோ ஏதாவது கைப்பற்றி ஆய்வுக்கு அனுப்பட்டிருக்கிறதா என்றால் சாட்சி வழக்கு கோப்பை பார்த்து இல்லை என்று கூறுகிறார். கத்தியும் அருவாளும் வெவ்வேறு வகையான ஆய்தங்கள் என்றால் சரிதான். அ.சா.பொ.1 கொடுவாள் கைப்பற்றப்பட்ட பிறகு அதன் நீளம், கூடவோ, குறைவோ செய்யாது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் அ.சா.பொ.1 கொடுவாளின் நீளம் 20 இன்ச் உள்ளது. தற்போது நீதிமன்றத்தில் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் இன்ச் டேப்பை வைத்து அ.சா.பொ.1 ஐ நீதிமன்றத்தில் அளவீடு செய்தபோது 21 ½ இன்ச் வருகிறது என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் அ.சா.பொ. 1 ஆனது 43 செ.மீ என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் செ.மீ அளவீடு செய்யப்படும் போது 48 செ.மீ வருவதாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கூறுவதற்கு சாட்சி நீதிமன்றத்தில் அ.சா.பொ.1 ஐ டேப் வைத்து அளந்து 43 செ.மீ வருவதாக கூறுகிறார். கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம் 95 ல், அ.சா.பொ.1 ல் அளவு ஒயிட்னர் வைத்து திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அ.சா.பொ.1 ஐ கைப்பற்றியதாக சொல்லும் அதிகாரியிடம் அதில் இரத்தக்கரை படிந்திருந்ததா என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு அதில் இரத்தக்கரை படிந்திருந்ததா இல்லையா என்பதை தெரிந்து கொள்வதற்கு நான் ஆய்வகத்திற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. அதேபோல் அ.சா.பொ.1 ல் எதிரிகளின் கைரேகை உள்ளது என்பதை காட்டுவதற்கு எதிரிகளின் கைரேகையேடு அதனை ஒப்பிட்டு பார்க்க ஆய்வகத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கான காயச்சான்றிதழ் கொடுத்த மருத்துவர் அ.சா.1 கிருஷ்ணகிரியில் சிகிச்சை எடுத்ததை வைத்து கொடுத்திருக்கிறார். அ.சா.1 கிருஷ்ணகிரியில் எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்று எனது விசாரணையில் தெரியவந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அ.சா.1 இந்த சம்பவம் தொடர்பாக கிருஷ்ணகிரியை தவிர்த்து வேறு எங்கேயாவது சிகிச்சை எடுத்துகொண்டாரா என்ற விவரம் எனக்கு தெரியவந்ததா என்றால் இல்லை. அ.சா.1

ஆனவர் 11.01.2017 முதல் 05.02.2017 வரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெறவில்லை என்றால் எனக்கு முன்பு இருந்த புலன் விசாரணை அதிகாரியை கேட்டால் தான் தெரியும். இந்த வழக்கில் காயம் பட்டவரை வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் என்பவர் மருத்துவமனையில் சேர்த்ததாக காயச்சான்றிதழில் உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 ஆனவர் வழக்கறிஞர் வெங்கடேஷ் குமாரின் இளம் வழக்கறிஞர் என்றால் அது எனக்கு தெரியாது. காயச்சான்றிதழில் மருத்துவர் மாருதி நர்சிங்ஹோம் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் காயச்சான்றிதழ் வழங்குவதாக கூறியுள்ளார் என்றால் அதனை மருத்துவரிடம் கேட்கவேண்டும். இந்த வழக்கில் மாருதி நர்சிங்ஹோம் மருத்துவரை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றும் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்துக்களும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் இருவரையும் அ.சா.1 சம்பவத்தன்று காலை 8.30 மணிக்கு தாக்கி எதிரிகள் இருவரும் குத்துயிரும் குலையிருமாக இருந்ததால் எதிரிகள் அ.சா.1 தாக்க வாய்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அசா.1 வழக்கறிஞராக இருப்பதால் அவர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி இந்த வழக்கை போடவைத்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**